46
446


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.
சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

24 APR 1935
MADRAS

# சிவஞானச் சிகாமணி.

இஃது
ஷை கற்பகவல்லிசமேத ஸ்ரீ கபாலீஸ்வரரின்மீது
நாற்பத்தோன்பதாண்டுகளாக
நறுமணப் பண்மாலைத் திருவாய்மலர்ந்தருளியவரும்,
சென்னை சேத்துப்பேடு
" ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச மடாலயத்தில் "
சமாதி திருக்கோயிற்கொண்டு விளங்குபவருமாகிய
அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
ஸ்ரீமத் - சிவப்ரகாச தேசிக சுவாமிகளின்
ஜ்யேஷ்டப் புத்திரரும், ஷை மடாலய ஆதீன அர்ச்சகருமாகிய
மதுரகவி - சிவப்ரகாச குமரகுரு தேசிகரா லியற்றி

கையோப்பக்காரர்களின் நன்முயற்சியினல்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு
55 - வது வருடத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5036 க்குச் சரியானத் தமிழ் பவ ௵ பங்குனி ௴ 5 உ
சுவாமி சந்நிதானத்தில் ஷை தேசிக ரவர்களால்
அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.
1935 ௵ மார்ச் ௴ 18 உ

Q23:38.2111 M9
N35
172180

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானச் சிகாமணி.

இஃது

ஷை கற்பகவல்லிசமேத ஸ்ரீ கபாலீஸ்வரரின்மீது
நாற்பத்தோன்பதாண்டுகளாக
நறுமணப் பண்மாலைத் திருவாய்மலர்ந்தருளியவரும்,
சென்னை சேத்துப்பேடு
“ஸ்ரீ ஜேய விநாயக சிவப்ரகாச மடாலயத்தில்”
சமாதி திருகோயிற்கொண்டு விளங்குபவருமாகிய
அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
ஸ்ரீமத் - சிவப்ரகாச தேசிக சுவாமிகளின்
ஜ்யேஷ்டப் புத்திரரும், ஷை மடாலய ஆதீன அர்ச்சகருமாகிய
மதுரகவி - சிவப்ரகாச குமரகுரு தேசிகரா லியற்றி

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு
55 - வது வருடத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5036 க்குச் சரியானத் தமிழ் பவ ௵ பங்குனி ௴ 5 ௳
சுவாமி சந்நிதானத்தில் ஷை தேசிக ரவர்களால்
அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.
1935 ௵ மார்ச் ௴ 18 ௳

OFFICE OF THE REGISTRAR
24 APR 1935
MADRAS







667
294.557

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானச் சிகாமணி.

அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய
ஸ்ரீ ஜெய விநாயகர் வணக்கம்.

வஞ்சி விருத்தம்-

ஓம் ஜெய விநாயகனே வுலகோடுயிர்ப் பரமன்
ஓம் ஜெய விநாயகனே வுயர்தவ மெய்ஞ் ஞானம்
ஓம் ஜெய விநாயகனென் றோதினவர்ப் பிறவார்
ஓம் ஜெய விநாயகனென் றாழ்வினைக டீர்ப்பாம். (க)

ஓம் ஜெய விநாயக னுபாசனையைக் கடவார்
ஓம் ஜெய விநாயகனி னுண்மையதி னிலைப்பார்
ஓம் ஜெய விநாயகனை யுணரில்முத்தி யதுவாம்
ஓம் ஜெய விநாயகன்று ளுகந்து யேத்துவமே. (உ)

3
667
294.551
24 APR 1937

ஓம் ஜெய விநாயகனே வுயிரனைத்து நிறைவன்
ஓம் ஜெய விநாயகனோ டொக்குந் தேவ ரிலையால்
ஓம் ஜெய விநாயகனென் றுரைத்து சன்மங் கடந்தார்
ஓம் ஜெய விநாயகன்சீ ரோங்கி வாழ்குவமே. (௩)

—o—

## சிவஞான பரமாற்புத லட்சணம்.

—(o)—

## தத்துவாதீத சமஸ்தவாஸ்பத சத்தசத்துணர தயைவேண்டுமாலை.

—‡—

### கலிவெண்சேந்துறை.

சத்தசத் தத்துவ முறைபடி நிருமித சரீரநிலை
யொத்தவத் தத்துவ மொடுங்கி யந்தரங்க வுளவாய்ந்து
சித்தமொத் துத்தவ நிட்டை யிடங்கூடி சீர்த்தியுற
அத்தனே தயைசெய வேண்டுமென் றேத்தி யஞ்சலித்தல்.

—O—

### தசாங்க விண்ணப்பம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—O—

ஓதரிய பரவெளியி லிசைநடனம் புரிகின்ற
வுளவொன்றை தயைசெய்யவும்
உண்மையறி வானந்த பீடமதி லமர்ந்திடு
முணர்விதென தயைசெய்யவும்
பாதாதி கேசமுத லனைத்தையு மொடுக்கிடும்
பக்குவந் தயைசெய்யவும்
பத்மா சனத்திலே யிருந்தபடி யிருந்தெனைப்
பார்த்திருக்கத் தயைசெய்யவும்
தா றுக்க ளதனதன் வழிகொண்டு வொருபடியிற்
றுனடங்க தயைசெய்யவும்

சத்துவ வொடுக்கத்தி னேர்மைகண் டதனூடே
தான்கலக்க தயைசெய்யவும்
சாதனை யெனுநான்கைப் பதினாறு பங்காகச்
சரிவர தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (க)

ஒப்புயர் விலாதமெய் யுளவாய்ந்து பிரமபதி
யூர்புக தயைசெய்யவும்
ஒன்பது வாசலை யடைத்துமுக் குணவழியி
லோய்ந்திருக்க தயைசெய்யவும்
சப்பாணிப் பிள்ளையார் சண்முகனுங் குகையினுட்
டானமர தயைசெய்யவும்
சத்திகுண் டலிநிரோ தாயிவா மத்தில்வர
தான்காண தயைசெய்யவும்
முப்பாழுக் கப்பாலு முந்நான்கு கலையுச்சியில்
மூச்சொடுங்க தயைசெய்யவும்
மூலாற்றி னிற்குளித் தந்திபக லுருமாறி
முன்பினற தயைசெய்யவும்
சப்பிரமஞ் சத்தினிற் றன்படுத்துச் சுகமருவ
சந்திப்பு தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ் சரணே. (உ)

எட்டாத வெட்டவெளி மேடேறி மலைகாணு
மெல்லையொன்று தயைசெய்யவும்
இடகலை முதலாக சுழுமுனைக் காந்தார
மிணக்கமுற தயைசெய்யவுந்
தட்டாத பளிங்குகண் ணாடிநிழ லதில்முகந்
தனைக்காண தயைசெய்யவுஞ்
சருவலோ கங்களு மொன்றாகித் தேவருடன்
றன்வாழ தயைசெய்யவும்

விட்டதைத் தொட்டதுந் தொட்டதை விட்டதும்
விலகிடத் தயைசெய்யவும்
மேவியே வருகின்ற சன்மார்க்க கடற்றுண்டி
வீடுபுக தயைசெய்யவுஞ்
சட்டமக் குன்றுவிளை யாடற்செய் தலகெலாந்
தானாக தயைசெய்யவுஞ்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (௩)

மங்காத வொளிதருஞ் சூர்யமண் டலத்தருகில்
வனமொன்று தயைசெய்யவும்
மாசற்ற யிடங்கொண்டு மதிசந்திர வீடுற்று
மகரந்தந் தயைசெய்யவும்
அங்கார கன்பற்றி வீடென்னு முச்சியி
லந்தரவி தயைசெய்யவும்
அரியயன் ருத்ரன்மஹேசு சுரன்சதா சிவமைவ
ரவையாக தயைசெய்யவும்
எங்கெங்கு முளசிவ ரணைத்துமொன் றாய்க்கூடு
மேகாந்தந் தயைசெய்யவும்
எட்டாத வீடதனிற் கொட்டாவி விட்டழியா
வின்பமது தயைசெய்யவுந்
தங்காத நிலைக்குள்ளே தானிருந் தரசுபுரி
சங்கேதந் தயைசெய்யவுஞ்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (௪)

பகரரிய முச்சாலை வீதியினில் வாசிமேற்
பாய்ந்துவர தயைசெய்யவும்
பத்மா சனத்தினி லிருந்தபடி தனைப்பார்த்து
பணியாற்றி தயைசெய்யவும்
இகலோக பரலோக மிரண்டினும் விளையாடி
யிச்சையற தயைசெய்யவும்

இருவினைக் கிடாக வருகின்ற குரம்பையை
யினிவரா தயைசெய்யவும்
சுகபோக முத்தியெனு மிரண்டற்ற வீட்டினு
டுங்கிட தயைசெய்யவும்
சூக்குமவா ரிதியினிற் றொடர்ந்து வருஞ்சுடரிற்
சொக்கிட தயைசெய்யவும்
தகதகென வொளிர்பிரபை நடுநா யகமாகத்
தானாக தயைசெய்யவுஞ்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (ரு)

ஓயாதக் கவலையெனு நாய்க்கடிக் காப்படி
வோட்டிவிட தயைசெய்யவும்
உள்ளத்தி லுள்ளபடி வொன்றித் திருக்கின்ற
வுளவொன்று தயைசெய்யவும்
காயா புரிக்கோட்டைக் கட்டுடையா மற்படி
கதியொன்று தயைசெய்யவும்
காமனுங் காலனுங் கைதொழுது நீங்கிடுங்
காலமது தயைசெய்யவும்
நீயாரு நானு ரெனக்கேட்டு மயங்காத
நிலைதனை தயைசெய்யவும்
நிட்டை தவம்விரத சாதனநோன் பிவையெலாம்
நீயாக தயைசெய்யவும்
தாயாதிகள் வந்து பங்கெடுக்கா முனந்
தனைக்காண தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (சு)

பாரமலைக் குகைவிட்டு வந்ததே போதுமினிப்
பற்றுது தயைசெய்யவும்
பாய்ச்சலூர் கிராமத்தி லோடுஞ் சிற்றுரிணைப்
பயிலாது தயைசெய்யவும்

வீரமலைக் குகையினி லுள்ள விந்திரியம்
விளையாமற் றயைசெய்யவும்
வெங்கான கத்தினுள் விளையாடும் பசுவோடு
வேட்டைபுக தயைசெய்யவும்
சாரமலைக் குகையைவிட் டப்புறம் போகாதச்
சம்பந்தந் தயைசெய்யவுஞ்
சட்குண விகாரங்க ளியாவுமொன் ருக்கிடுஞ்
சமர்த்துவந் தயைசெய்யவுந்
தாரமலைக் குகைக்குளே தனியாக நிற்கவொரு
தந்திரந் தயைசெய்யவுஞ்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (எ)

ஊனாகி யுடலாகி யுயிராகி விளையாடு
முளவதனைத் தயைசெய்யவும
உள்ளும் புறம்புமொன் ருகியே நிலைத்திடு
முண்மைதனை தயைசெய்யவும்
வானாகி மலையாகி கடலாகிப் பலபொருளின்
வடிவமேது தயைசெய்யவும்
மாற்றமுந் தோற்றமுங் காற்றுடி யசைவிலே
மங்காது தயைசெய்யவும்
நானாகி நீயாகி தானேதா னதுவான
நாட்டத்தை தயைசெய்யவும்
நாதமெனு நடுமூனையி லரசுபுரி கின்றதை
நானறிய தயைசெய்யவுந்
தானனப் போததா னாகித்தனாய் நின்றத் ·
தனியிடந் தயைசெய்யவுஞ்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (அ)

கலைகண் வழியேசென்று காந்தார புரந்தனைக்
கண்காண தயைசெய்யவும்

கனகமலை நடுவிலே யொளிர்கின்ற பீடமேற்
காலூன்ற தயைசெய்யவும்
மலைவுபடு சத்திகளை யுறவுகொண் டவராலே
மாய்கையற தயைசெய்யவும்
மஞ்சனந் தனிலிருந் துலவிகுலவுந் தன்மை
வாய்த்திட தயைசெய்யவும்
நிலையதனை யெவைவரினு மாறாது கைப்பற்று
நெறியொன்று தயைசெய்யவும்
நிகரிலா குண்டலியி னிடமமுத மாந்திசதா
நிட்டையுற தயைசெய்யவும்
தலையான யோகபடி தாண்டியே ஞானபடி
தனிநிற்க தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே. (சு)

எனதென்ப தனதென்ப தவையென்ப திவையென்ப
தெவையென்ன தயைசெய்யவு
மிச்சைவழி சென்றுபல லச்சைப் படுவதற்
கெவர்த்தலைமை தயைசெய்யவும்
மனமெனூஉ மர்க்கட மொருவழியி னின்றென்முன்
மாறாமல் தயைசெய்யவும்
மனையறக் துறப்பதே சாத்மீக படியென்று
வரமொன்று தயைசெய்யவும்
கனகமே வோடென்று நினைத்தவை முடிக்கும்வழி
கருணையுடன் றயைசெய்யவும்
கடபட மிரண்டுமொன் றுமெண்ணு மார்க்கநிலை
கண்காண தயைசெய்யவும்
தனதென்ப தெனுமவைக ளியாவையுங் கருதாது
தனியாக தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வுச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ்சரணே (எ)

வந்தவழி யெந்தவழி யந்தவழி யினிவரா
மற்படி தயைசெய்யவும்
மலருமண மொருங்காகு மார்க்கப்போ னடீனன்
மன்னும்வழி தயைசெய்யவும்
தொந்தபதந் தொய்தபத மிவைரெண்டு மொன்றுகுந்
தொந்தமுற தயைசெய்யவும்
சுகபோக யோகநிலை மாரிமெய்ஞ் ஞானவழி
சூழ்ந்திட தயைசெய்யவும்
சிந்தை சிவமாகவுந் திரிலோக மரசுபுரி
சித்தியதை தயைசெய்யவும்
சேவடி நிழறந்து சிவப்ரகாசன் றெழுகை
சீராக தயைசெய்யவும்
தந்தனந் தானனேன் தானே தானனேனென
சாயுச்சியந் தயைசெய்யவும்
சச்சிதா னந்தகுண வச்சித கபாலீசனே!
தயைசெய்ய வேண்டுஞ் சரணே. (௰க)

—※—

## 1886 - வதாண்டு திருமயிலை கபாலீசர்பேரில் த்யான சுஜன ரஞ்சித ரத்நாகரம்,

---

### விநாயகர் துதி - வெண்பா.

அந்தரி யுமாபதினல் லகமகிழ மெய்யொளியே
சுந்தர கணேசா நீதுணையிருந்து—விந்தையுடன்
மைலை கபாலீசர் மலர்பதமேற் பண்சாற்ற
கைலை பெருமானே நீ—கா.

—※—

### ருத்ராஷரமாலை. எழுசீர் விருத்தம் பண் - தேள்ளேணம்.

நித்யனேசுக நின்மலானந்த நீதியே ஞானசோதியே
அத்தனே பரிசுத்தனே நிறையகண்டி தாகார பூரண
சித்தர் முத்தர்கள் முனிவர்கள்துதி திருவொளிகமழ் மயிலைவாழ்
வித்தனேயுனை நித்தமுந்தொழ விதியுண்டோ கபாலீசனே. (க)

பரமனேயுந்தன் பழமறைதனைப் பற்றற வுணராமலே
காணமானவென் பஞ்சபூதமுங் கண்ணீர்கொண்டு கலங்குதே
சரணமென்றுனை யடைந்திடாமலே சத்துருவெனு மும்மல
நரகவேதனைக் குட்படாமலுன் ஞானந்தா கபாலீசனே. (௨)

எத்தனைச்சரண் செய்தென்தன்குறை யியம்புவேன் சிவநாதனே
அத்தனையுமுன் செயலெனவே யானன்றி வேறொன்றுஞ்சிந்தியேன்
வித்தகாவுனை நம்பியும்மனம் வேகுதல் நீதியாகுமோ
கர்த்தனேயினி யாகிலுமுன்றன் கருணைதா மயிலைவாசனே. (௩)

என்னபாதகஞ் செய்திருப்போமென் றெண்ணியே மனங் குன்றுதே, உன்னையேதுதி செய்தொழுகியு மூமையன்கன வாகுமே பண்ணிறைப்பதம் பாடியேயுனை நாடியேதினம் வாடினேன், இன்னமுங் க்ருபை யில்லையோ யேழை யென்செய்வேன் கபாலீசனே.

ஆதரவுமை யன்றிவேறொரு வரிலைப்புவி மீதிலே
பாதமேகதி நம்பியேதொழும் பாதகன் றுயர் தீர்த்தருள்
வேதமும்பஞ்ச பூதமும்சுவ நீதமாகிய சின்மயா
வாதனைமிகக் கொண்டதால் மனம் வாடுதே கபாலீசனே. (௫)

சத்தியுஞ்சிவ மாகியேநின்ற சர்வவ்யாபக ரஞ்சிதா
பத்திசெய்திடாப் பாவியானிந்தப் பாரினிற்பிறந் தென்பலன்
நித்யவாழ்வை யடைந்திடவே நினைந்துருகி பஜித்துமே
கத்தியுந்தொண்டை கம்முதேயின்னங் கருணையில்லையோ யீசனே.

எண்ணியு முடியாதேயென்பவம் ஈசனே யறிந்திலையோ
புண்ணெனும் மடமாதர் சோகத்தால் புத்தியும் மறைவாகுதே
கண்ணிருந்துங் குருடனென்னவோ கர்த்தனேநீ விதித்தது
பண்ணியவென்தன் பூஜையாவும் பாழாகுமோ கபாலீசனே. (எ)

தாயினை பரிதந்த பாவியான் தற்பராவென் னிலைமையை, வாயினாற்சொல்லி வெல்லுமோ பொல்லா வஞ்சகன் படுந் துன்பமே, தூயனே யுன்றன் றுணைய தன்றிவே றொருளார் வைய மீதிலே காயமோபழு தாகுமுன்கதி காட்டுவாய் கபாலீசனே. (அ)

சோதனைச்செய்தா லெந்தனின் மனந் தாளுமோ பின்பு மாளு மோ, பாதமேதுணை நம்புந் தொண்டரை பாவம் பற்றலும் வஞ் சமோ, காதகன் எம பாசந் தன்னிலியான் கட்டுண்டால் மிகு நன்மையோ, பேதைபோல் தவிக்கின்றது முன்செய் பிழையோ சொல் கபாலீசனே. (கூ)

கோவிற் சென்று கொண்டாடினேன் குறை நீங்குமென் றெண்ணி ப் பாமலர், தூவியேதுதி செய்து மென்றனின் துயர் விடாதென்ன தோதகம், ஆவிமாய்ந்திட அந்தகன்வரு வானவ்வேளையிலார் துணை பாவி யானுனைத் தாவிபொன்னடி பணிந்தேனற் கபாலீசனே. (௰)

செல்வ மானதில் லாவிடிற்செகத் தோர்களிராவருமே பகை வல்லவாயுன தருளைவேண்டி வணங்கிடார்ப் புவியோர் சிலர் பல்விதமாய்கைப் பற்றியே பவந் தன்னிலேமனஞ் சென்றிடா நல்லருள்தந் தடிமைக்கொண்டிடில் நமனுண்டோ கபாலீசனே.

நெஞ்சமோ மாபுண்ணாகுதே யிதை நினைத்திடில் கடம் வே குதே, பஞ்சையாகிய வெந்தன் வாதையைப் பற்றறுப்பதுன் குற் றமோ, அஞ்சியும்பவம் மிஞ்சுதென் செய்வேன் யாருமற்ற வடிமை யான், கெஞ்சியுங் க்ருபை யில்லையோ பொல்லாக் கேடன்மேல் கபாலீசனே. (௰௨)

நிலையிலாவுடல் தனையான் மலையென்ற னித்ய வாழ்வினிற் சிக் கியே, உலையினி லுறும் வெண்ணெய்யென வுள்ளமோ மிகு யேங்குதே, அலையுதேமன மறுதேபவ அந்தகாரமா மாயையில் தலைவனேயுன தண்ணளியருள் ததியிதே கபாலீசனே. (௰௩)

அந்தகாரத்தி லாட்பட்டே யுழன் றலையும் பேதைகள் தன்னையே சுந்தரமாக போற்றியே தன சூன்யத்தால் திரியாமலே எந்தையேயுனை யன்றி யென்னுவி லிசைந்திடாமலே நின்னருள் தந்தருள் சிவானந்தனே திரு மயிலைவாழ் கபாலீசனே. (௰௪)

திங்களுங் கதிர் வியோம மும்படைத் தாண்டழித்திடும் வல்லவா பொங்கிவாடிடும் புன்மனந்தேறப் போதனைச் செய்தால் புண்யமே

சங்கையாக கங்காதரன் றெழுஞ் சைவ சமயப் பேரின்பமே
மங்களப்பதந் தந்தருள்திரு மயிலைவாழ் கபாலீசனே. (யரு)

——(o)——

ருத்ராஹரமாலை முற்றிற்று.

——o——

## ஸ்தௌத்தியக் களஞ்சியம்.

இராகம் - காம்போதி அடதாளம்.

பல்லவி.

கைலைக்கு நிகரான மைலை கபாலீசனே
கருணைத்தந் தாளாதுன் வஞ்சமோ

அநுபல்லவி

பையர வத்தைப்போல பாழும் மாயை யடுத்தே
பதைக்குதே யுயிர் சிதைக்குதே முற்றும்
வதைத்திடாமலுன் பதத்தை யீந்தருள் (கைலை)

சரணங்கள்.

(க) ஆடென்றும் மாடென்றும் வீடென்றுந் தேடுவ
தியாவும் பார்க்கில் பொய்யே—பின்பு
பாடுவத் திடுமப்போ படுவார் வேறுளரோ சொல் - நீ
கூடு விட்டாவி போகு முன்னருள்
கூர்ந்தருள் வினை தீரவே நவில் (கைலை)

(உ) எத்தனைக் கலைகற்று மிருந்துந் தனச்செருக்கா
லிருமாந் திருத்தல் நலமோ—பாழுஞ்
சித்த மடங்கா விட்டாற் றெளிந்திடுமோ சூது - நீ
அத்தனே அஷ்ட சித்தனே எனை
யடிமைக் கொண்டிடா தென்ன வாது (கைலை)

(ந) பாவஞ்செய் வோரில்முதற் பாதகமென்றோ என்மேல்நீ
பாரா முகமாகினதோ—உந்தன்
சேவைத்தந் தாளாமல் தீருமோ என்குறையே - நீ
நாவலன் கங்காதரன் பஜித்துமே
நவிலுஞ் சின்மய மான துரையே (கைலை)

——‡——

## நாமாவளி.

இராகம் - அம்சத்வனி ஆதிதாளம்,

பல்லவி

கைலாசனே நமோ நமோ திரு
மயிலை வாசனே நமோ நமோ ஹரஹர (கைலா)

அநுபல்லவி

வையக மெங்கும் புகழ் தங்குங் கபாலீசனே
வாதா விநோதா என்றுயர் தெரியாதா (கைலா)

சரணங்கள்

(க) சிற்சுக வாரியே தேஜோன் மயனே
சிந்தைக் கடங்காத தினகரனே சுகனே (கைலா)
(உ) ஆந்த் ரீதமறை யாவுக்கு முன்னோனே
அஷ்டாங்கமதை யநுசரித்தோர் நவில்வோனே (கைலா)
(ங.) அண்டரண்ட பகிரண்ட மியாவும் துதிக்கும்
தொண்டன் கங்காதர னுளந்தனில் கதிக்கும் (கைலா)

—o—

## சைவசமயத்திரட்டு.

### சைவசமய ஆதாரத்யான சுலோகம்.

பக்தாமிர்தம் விஸ்வஜநநா மோதனம் ஸர்வாங்கபதம் ஸஹஸ்ட்டஜாகோ நிழத்வஜமாம் நாமான்மியம் த்ராவிடம் பக்த பூஜிதம் சன்னியம் நாமான்மியே ஸ்ரீலக்ஷித பிரமாதார சத்பஹோக்ஷியாத்ம குஜாதலக்ஷீஹத் புரோக்ஷிதர: அபிவிதாந்த்ரிதயர; பக்த விஸ்வாஞ்ச்சணே ? சகஸ்ற்றிரஹ:

—❋—

சர்வம் சிவமயம் ஜகத் நம:

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்,

தெய்வருள தென்பவர்கள் சிந்தையினில் நின்றொறுக்குஞ் செயலுணர்ந்தே, பையரவம் பூண்டபர சிவனடியைப் பணிய வெகு பக்திகொண்டே, வையமிசை யறம்பாவ மெனும்பாச மதை யொழிக்க வடிமை செய்தே, சைவமெனுஞ் சமயமதை யுண்மை யென நம்பிபுகழ் சாற்றலாமே.

## சமய விசேடம்

இராகம் - ஆகிரி ஆதிதாளம்

பல்லவி

சைவசமயமே சமயம் சதுர்மறைமுர சறைந்திடும்
சைவசமயமே சமயம்

அநுபல்லவி

மையாருங் கண்டனுட மலர்பாதத்தை வந்திக்கும் - ரீ
வையக மளந்த மாயன் வாழ்த்தி தினஞ்சிந்திக்கும் (சைவ)

சரணங்கள்.

(க) முத்தர்கள் மனமும் புகழும்—முனிவர்முதல்
சித்தர் கணமுமே திகழும்
அத்தனினடியதனை யெத்திசை தேடியுங்காணு
வித்தக னெனவேதிரு பத்தர்கள் மகிழும் ஞான
போதன் தில்லைநட பாதன் மலர்பிரக் யாதன்
அருள்ஜக நாதன் உம்பர்பணி
வேதன் அம்பிகைச மேதன் ப்ரபுடீக
நீதன் அரியாத திதன் மகபதி
தேவரோ டறுபத்து மூவர் களிக்குந் தவ—ரீ
ஜீவலட் சணசொரூ பானந் தனுதிசிவ (சைவ)

(உ) திரிபுர மதனை யெரித்தோன் - சிற்பரவடி விளங்கிடும்
கரியுரி போர்த்து சிரித்தோன்
நரியுதைப் பரியாய்ந்தன் மாணிக்கர்க்கே செய்வித்தோன்
நவிலொணு சுந்தரர்க்காய் நாடிதூது சென்றோன் முத்தன்
உண்ட முலகமு மெண்டிசை பரவுங்
கண்டன் ஆலவிட முண்டோன் நவமய
தெண்ட விடுஞ் சுத்த தொண்டர்க் கருள்செய
சண்டனை புதைத்து மண்டலம் புரந்த
மகா நதிதசிவ மயமாகிய சுஞ்ஞான—ரீ
சுகா பாத்ததை நல்குஞ் செந்தே னமுதமான (சைவ)

(௩) நிறைந்த பிறையினொளியே நிட்களங்கிர்த மகத்வ
நித்தியா னந்த வெளியே
இறைவ னடியிணைமேல் இன்பமதை மிகக்கொண்டு
குறைக ளதனைப் போக்க குறித்தமைப் போலத்தொண்டு
செய்து வன்னமலர் கொய்து ஞானமூர்தம்
பெய்து பொய் வாழ்வதை வைது பரமனை
கையின் நெல்லியென துய்ய முடன் காண
மெய்யன் போடுபணி வைய முறுகிட
மறையினில் நடமிடும் மாதவர்க ளிறைஞ்சிடும்—நீ
கறைகாணு துழன்றிடுங் கசட்டா லறியொணுத (சைவ)

(௪) கலைகள்பல முரசறைய கங்குற் பகலிலா
கடந்த ஆதிக்யம் நிறைய
துலைவாம்! அஷ்டாங்க யோக தத்ய வழியில் நாட
மலைவு படுங் குரங்கை வழிபட் டொடுங்கி கூட
மாறி மும்மலத்தைத் தூறி தவந்தரும்
நாரியர் பாகனைக் கோறி மதித்திட
தேறி விளங்கிடும் பாரின் வாழ்க்கை யின்மேல்
சீறி வாசியின்மீ தேறி வணங்கிட
பரஞ்சோதி! முனியுடன் பதஞ்சலியுங் கொண்டாடும்—நீ
அரவா பரனெனவே அடியவர் தினம் தேடும் (சைவ)

(௫) ஆகம மாதிபுராணம் அருங்கலம்பக நிடைதமும்
சோகந் தவிக்கும் வராகம்
பாகவதமு மாற்சியம் கௌர மார்க்கண்ட வர்த்தம்
கைமபமா மன மினிக்குங் காருடம் பத்மம்
ஈசன் கருணைமா நேசன் கழலடி
பாச முடன்றுதி தேசன் குருவுப
தேச மதைக்கொண்டு வாச மனம் விண்டு
ஆச னமதுள வேச முறை வழா
நாரதீயங் சாருணிதம் பிர்ம நைடதம் - நீ
சாரஸ் காந்தமும் பௌஷியமு முரசறைப்ும் (சைவ)

(௯) எங்கும் வியாபகப் பொருளே இருடியர் தினமகிழ்வுறுந்
துங்க வரமொன் றருளே
பங்கயனுங் காணுதப் பரமனே! சின்மயனே
அங்கிங் கெனுதகண்டா கார! நவஜெயமே
ஆட மனமது கூட திருவருள்
தேட அடியர்கொண் டாட வினைபறந்
தோட அன்பரிடம் நாட மாயையினே
ஜாட ஆனந்தக்கூத் தாட தகையுடன்
சங்கர னெனவே துதித் திடவரம் நீடும்—ரீ
கங்காதர னனவரதமுமே பண்பாடும் (சைவ)

—(o)—

## துக்கடா.

இராகம் - தேவமநோஹரி ஆதிதாளம்.

பல்லவி.

சைவசமயமே! சமயம் - யோக
சாதனை செய்வது வுபயம் அபயம்

அநுபல்லவி

சிவமயஞ் சிவமயஞ் சிவமயமே - சிந்தை
செயினி லேது எமபயமே (சைவ)

சரணங்கள்.

(௧) மாலும்! அயனுங் காணுப் பாதம் - அதை
மகிழ்ந்து வணங்குவ தரிதம் போதம் (சைவ)

(௨) பக்தியாய்! பஜனைசெய் நெஞ்சே - உலக
பாவந் தொண்டருக் கொரு பஞ்சே செஞ்சொல் (சைவ

(௩) ஆறு தார சுழிமுனையே! திரு
அம்பல! நட நவ மணியே கனியே (சைவ)

(௪) தேறித் தெளிதல் சிவஞானம் - கொண்டு
தெரிசனை செய்தல் மெய்ஞ்ஞானம் மோனம் (சைவ)

(௬) உம்பர்க ளடியிணைக் கேற்று - சிவ
எம்பிரான்! கழலதைப் போற்று யேற்று (சைவ)

(௭) வேத போர்தித் தன்னைக் கூறு - பொல்லா
மாதர்க ளாசையைத் தூறு சீறு (சைவ)

(௮) ஐம்புலன் களையடக் கிடுவாய் - பொன்
னம்பல னடிதொழா விடில்நீ கெடுவாய் (சைவ)

(௯) தாழ்வினி லிருந்திட விரும்பு - மோக்ஷ
வாழ்வோ திகட்டிடா கரும்பு நீ நம்பு (சைவ)

(௰) ஈச னடியதனை நோக்கு - எமன்
பாச வலையதனை நீக்கும் தேக்கும் (சைவ)

(௰) சிவயநம சிவய வெனச் சொல்லு - இதை
சிந்திக்கா தார்மனங் கல்லு வெல்லுஞ் (சைவ)

(௰௧) சங்கரன் பதமதிற் சேர்க்கும் - துதி
கங்காதரன் கவி நோக்குங் காக்குஞ் (சைவ)

—— o ——

இராகம் - தேசிகக்குறிஞ்சி ஆதிதாளம்.

பல்லவி

சிவமணியே! நின் தரிசனைத் தந்தாள்
சிற்சுகோ தயமணியே கண்மணியே

அநுபல்லவி

தவமா மணியே தண்ணளி மணியே
தயைநிறை மணியே தற்பர மணியே
நவமா மணியே நன்மறை மணியே
நல்லடி யவரிரு தயவொளி மணியே (சிவ)

சரணங்கள்

(க) கண்ணொளி மணியே கருணைமா மணியே
விண்ணின் மணியே வேதாந்த மணியே
பண்ணவர்ப் பரவும் பரஞ்சுடர் மணியே
என்னிருகண் மணியே ஈசுர மணியே (சிவ)

(உ) திரிபுரமதை நீறாக்கிய மணியே
நரியைப் பரியாய்செய்த நாதாந்த மணியே
அரி பிர்மாதிதொழும் அருங்கைலை மணியே
கரியுரி போர்த்தக் கமலமா மணியே (சிவ)

(ந) காலனை சிதைத்தக் கபோபல மணியே
கங்குற் பகலில்லாக் காருண்ய மணியே
ஆலமதனை யுண்ட அற்புத மணியே
ஆனந்த நடஞ்செய்த அரஹர மணியே (சிவ)

(ச) எண்டிசை யோர்துதி ஏகாந்த மணியே
மண்டலமே புரந்த மகத்துவ மணியே
தொண்டர் மனம்நிறைந்த துத்யாதி மணியே
கண்டா மணியே ஞானக் கனிசிந்தா மணியே (சிவ)

(ரு) ஐம்பத்தோ ரக்ஷர வகண்டித மணியே
அஷ்ட லக்ஷண அபரஞ்சித மணியே
உம்பர்கள் பணிசெய்யும் ஓங்கார மணியே
ஓம்ப்ரணவ மணியே வுயிர்க்குயிர் மணியே (சிவ)

(சு) சோமசுந்த்ர மணியே சுஷ்கிதமணியே
சுந்தரை தங்யபரஞ் சோதிடமணியே
காமன் றனையெரித்த கடலஸ்விதமணியே
காரணபூஜைபலனியே கார்த்திடுங் த்யாலமணியே (சிவ)

(எ) வாசிவா சிவாவென வருங்குருமணியே
வள்ளலேசித்ரபலனியே வடிவிலாமணியே
தேசிகபலனியே தேஜோன்மய மணியே
தில்லையில் நடம்புரிந்ததிவ்ய கனகமணியே (சிவ)

(அ) பைந்தார் பலனியே பக்தியின் மணியே
பன்னிரு கலைச்சுழியிற்பரவும் நன்மணியே
சந்திரமணியே சாஸ்விதமணியே
சச்சிதா னந்தசிவ சமயகன்மணியே (சிவ)

(கூ) மூவகை தொழிலின் முதலே விண்மணியே
முத்திதனை யருளும் மோனமா மணியே
நாவலன் கங்காதரன் நவிலும் பொன்மணியே
நான்மறை முரசறைநற் கற்பூரதீபமணியே. (சிவ)

—✲—

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கனகமணி மேடையெனுஞ் சுழுமுனையில் நடநமேசெய் கருணை நாதா
சனகமுனிவர்கள் தமக்கன்றுதவி செய்தவனே சாஸ்வி தாந்ரா
சினமுடனே கட்காமங் கொலைகளவுபொய் யதினுல் சிந்தைநொந்தேன்
இனமுந்தன் அருள்வருகா தாதலினுல் என்மருழியும் என்ஜனனமே.

—o—

இராகம் - பைரவி மட்டயதாளம

பல்லவி

என்று! ஒழியுமெந்தன் ஜன்மம் ஐயையோ! என்று சிவனே
எதென்றுந்தெரியேனுன் வன்மம் என்கன்மம் (என்று)

அநுபல்லவி

அன்று நால்வர்தமக்கு அருளிய ஜகதீசா
மன்றுள் நடனஞ் செய்மீதாய் மயிலை கபாலீசா (என்று)

சரணங்கள்

(க) கண்ணும் பஞ்சடையுதே கருத்தும் வேருகுதே
எண்ணுதும் எண்ணுதே ஏங்கிப் புண்ணுகுதே (என்று)

(உ) மும்மல வாசையால் மூச்சு வடங்கிடுதே
செம்மலே என்றுயரால் சிந்தை நடுங்கிடுதே (என்று)

(ந) ஐயோ! என்போல் பாவி யாருமில்லையே பூவில்
பொய்யாம் வாழ்விலழுந்தி போய் மடியாமுன் ஆவி (என்று)

(ச) தாயுந் தந்தை மனையாள் தந்த துயரால் வெம்பி
தூயசிவனே யுன்றுள் துணையை சத்தியமாய் நம்பி (என்று)

(ரு) உற்று ருநவினரோ டுலகிலுள ரேசாமல்
பெற்று ருடனே கற்றேர் பேயனென்றே பேசாமல் (என்று)

(சு) கன்றுபோற் கதறி காமமதால் சிதறி
நன்றுதீ தென்றுணராம லலைந்தேன் பதறி (என்று)

(எ) பாழு முடலெடுத்துப் பட்ட துன்பமோ கோடி
சூழு மாயைய வெறுத்து சுழிமுனை தனில் நாடி (என்று)

(அ) இனியாகிலு முனது இன்ப பதமருளே
பணிவாய் கங்காதரன் பகருஞ் சிவபொருளே (என்று)

—✻—

இராகம் - மோகனம் அடதாளம்.

பல்லவி.

உன்னை ! விடவேறு தெய்வந் தானுண்டோ சிவசங்கரா ஹர
ஓதித் துதித்திடவே? மதித்திடவே? பஜித்திடவே? பாழுலகினில்

அநுபல்லவி

விண்ணோர் புகழ்மயிலை மேவுங் கபாலீசனே
விபூதர் பராவிப் போற்றும் வித்தகனே மஹேசனே (உன்னை)

சரணங்கள்.

(க) அந்தரி யுமை யம்பிகை சமேதா — அடிமையின் றுயரகற்ற
அருட்கண் பார்த்தாண் டருள வொண்ணாதா
அம்பரி திகம்பரி — அந்தரி
சுந்தர மூர்த்திக்குத் தூதுசென்ற பொற்பாதா
எந்தையே யுனையல்லா லெவருதவி சொல்லாதா [உன்னை]

[உ] காமன் றனைக்கண்ணாலெறித்தவனே — கருணை விசாலனே
கருத்திலுக் கடங்காபுராந்தகனே — காலனை யுதைத்தோனே-காம
சாமள வாகரனே சந்தர ஜடாதரனே
சர்வ பரிபூரண சாக்ஷாத் காரனே பரனே [உன்னை]

[ந] பலவித போதனைகள் தான்கிலையோ — பகர்ந்துணர்ந்து? பார்க்கில்
பன்னிரு கலைகண்டவர்க்கோ ரிதுமலையோ — பத்தியதில்
மிகுந்திடில் அலகையெனு மும்மல ஆசையைப்பற்றறுக்க
அத்தனே நின்றயவை அளவிடப்போமோ ? ஐக்ய [உன்னை]

[ச] தொண்ட ருளமதிலாடுஞ் செந்தேனே — நித்யாதியம்பரா
சண்டனனு காமுன்வரந்தா ? பூமானே — துரியாதீதப்பிழம்பே
எண்டிசையும் பணிசெய் திலகும் பரமானந்தா
எங்கும் நிட்களமான இறையே சுகானந்தா [உன்னை]

[ரு] சருவலக்ஷண முடைய தற்பரனே — சங்கரி மனோகரனே
தயைசெய் தடியவர் நமக்கருள் சரணே — சாக்ஷாதி ஹரனேசருவ
அருமறை மிகுபுகழும் அன்பத்தோ ரக்ஷரனே
சிறுமையை தவிர்த்தருள் சின்மயசி ரந்தரனே [உன்னை]

[சா] உனைநிதம் பணியாமல் சுகம்வருமோ — ஓம்சிவயநமவென
உனைநினையாமல் பிறவி வினைபோமோ — உலகவாழ்வதை நம்பி
பனைமரம் போல்வளர்ந்தும் பக்தியென்ப தில்லாத
பாமரர்களால் ஞானம்வருமென்று எண்ணல்நீதே [உன்னை]

[எ] ஜீவ லக்ஷண மாசிலாமணியே — திருமயிலை மேவிய
ஜின்மகேந்திரித மானசவமணியே திகட்டாத வமிர்தமே — ஜீவ
நாவலன் கங்காதரன் - நஞ்சிப்புகழ் மணியே
நான்மறை முரசறைந் - திடுங்கண்டாமணியே [உன்னை]

—— (○) ——

இராகம - விஜிந்தி ஆதிதாளம்.

திடன் கூறல்

பல்லவி

வந்தாலும் வரட்டும் - பழி வந்தாலும்
நரகம் வந்தாலும் சுகம் தந்தாலுந்தரட்டும் - சிவனே
மறுஜனனம் மறுஜனனம்
மறுஜனனம் மறுஜனனம் - ஐயோ? [வந்தா]

அநுபல்லவி

நொந்தாலும் நோசட்டும் - மனம்புண்ணாக நொந்தாலும்
நிந்தை வந்தாலும் வரட்டும் - சிவனே
சின்மயனே யாவும் சம்மதியே
ஆயன் விதிப்படியே வந்துமுடிவதினால்? ஐயோ? [வந்தா]

சரணங்கள்

[க] இகழ்ந்தாலும் இகழட்டும் கற்றோர் இகழ்ந், சுற்றம்,
இகழ்ந், மற்றோர் புகழ்ந்தால் புகழட்டும் - சிவனே
சுகமில்லையே கடம் பழமிலையே என்மேல் இலைதயையே
நான்மிகு எளியனேயே? ஐயோ? [வந்தா]

[உ] வாழ்ந்தாலும் வாழட்டும் - பலர் வாழ்ந், நான்மிகு
தாழ்ந்தாலும் தாழட்டும் - சிவனே
வல்லவனே உல்லாசகனே பரமீசரனே
என் முற்பவத்தால் ஜனனம் ஐயோ? [வந்தா]

[ந] தின்னாலும் தின்னட்டும் - கொன்று தின்று, இகழியாக
சொன்னாலும் சொல்லட்டும் - சிவனே
சொற்பனமே மா - தற்கணையே பல
விற்பனமாய் சனி கற்பனையாய் பழி ஐயோ? [வந்தா]

[ச] வேதம் பேசினால் பேசட்டும் - குதற்கவாதம்
பேசினால் பேசட் - என்னை ஏசினால் ஏசட்டும் — சிவனே
விமலவிதா னந்தசுதா எண்டமலகுணா
இது சதிதபதா - ஜனனம் ஐயோ? [வந் தா]

(ரு) சிந்தித்தால் சிந்திக்கட்டும் - எல்லாம் சிந்தித்தால்
எனை வந்தித்தால் வந்திக்கட்டும் - சிவனே
சின்மலனே ஆனந்தயனே பல தீவினையும்
எம வாதனையும் தானையோ (வந்தா)

(சு) பித்தனுனலு மாகட்டும், சித்தனுனலு மாகட்டும்
சத்துப் போனலும் போகட்டும் - சிவனே
முத்தர்களும் பதிணெண் சித்தர்களும் புகழ்
அத்தனே நின்றயவால் இத்தரைமிசை துன்பம் (வந்தா)

(எ) பாடினுல் பாடட்டும் கங்காதரன்பண் - பாடினுல்
மனிதரைக்கொண் டாடினுலாடட்டும் - சிவனே
பத்தியிலா தவர்களுத்தம ராயினும் சத்துசித்தானந்த
வித்தக னருளிலாதால். (வந்தா)

## சிவத்யானவலஹரி.

ஆனந்தாநுபவசூத்திரம் பண் - தேள்ளேணம்.

சகலலோக நாயகம் சதாசிவாய மாம்பரம்
நிகலதேவ வந்த்யபூத நிர்மலாய ரூபகம்
அகிலபஞ்ச பூதமா யனாதி சைவமாஞ்சுகம்
ஜகவிநோ தமேபரஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (க)

சுடலையாடு வான்கரக் கபாலது ளிதப்ரியன்
சுடலையாடிடுங் குழாஞ் சுகிக்கவல்ல நாயகன்
படியுளோர் துதித்திறைஞ்சும் பாநுகோடி சேகரன்
திடசிவோகமே பரஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (உ)

ஆலயம் பலவுள வநேகதேவர் தாமுள
சீலமும் பலவுள தெருளுளோர் பலவுள
மாலய னமராதி மாதவர் பலருள
காலகால னேபரஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (ங)

அங்குமிங்கு மெங்குமா யாதியா யநாதியாய்
திங்கள்சூடு செஞ்சடைத் திகழ்நின்ற பூரணம்
தங்கமேவு தெண்டமாடு துதிக்க நின்ற தற்பரம்
எங்களையனே பரஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (ச)

முத்தாகி மூவராய் முதல்வரா யிலங்கிடும்
பித்தனுகி நின்றசோதியே சொல்லர்க் கரியதாய்
எத்தலத்து மேத்தவல்ல வென்குணக் கடலெனும்
அத்தனே பரஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (ரு)

ஞாலமியாவையும் படைத்தநான் முகத்தனேடுமால்
சீலமாரடிமுடி யுலாவித் தேடிக்காணுை
ஸ்தூலமாயிருந்து சோண சயிலமே கதித்தெழும்
ஆலமுண்ட கண்டனே பரஞ்சிவம் சிவம் சிவம் (சு)

உலகில்வந்த சுந்தரர்க்குகந்து தூது சென்றவன்
இலகுமப்பரைதடுத்து வின்பமாய் விழுங்கினேன்
அலகிலா நரிகளைப் பரியதாக்கி விற்றவன்
திலநிறைந்த வஸ்துவே பரஞ்சிவம் சிவம் சிவம் (எ)

நீலகண்ட சோமசூர்ய வக்னிநேத்திர சோபிதம்
கோலமாங்கரிபுலி குலாவுமான் மழுப்படை
ஏலமார் ஜடாதரமிடத்தில் பத்னி கோமளம்
சீலமாங்கைலைவாழ் பரஞ்சிவம் சிவம் சிவம் (அ)

முத்திசேர்ந்திடும் ப்ரதாப முக்குணத் துளதமமாந்
தக்கனைத்துணித்தவீர பத்ரானுதந்தவன்
செக்கர்மேனி யெம்பிரான் திருந்தகிலமியாவையும்
மிக்கஞானமே பரஞ்சிவம் சிவம் சிவம் சிவம் (கூ)

அச்சுத னயனுமும்ப ரடிவணங்கி வாழ்த்தவுங்
கச்சுபூண் முலைக்கவுரி காதலோடு வப்புற
மெச்சுவா னரம்பைமார்வியன் கவரிவீசவும்
இச்சையற்ற நடன வெந்தையேபரஞ்சிவம் சிவம் சிவம் (ய)

ஆனந்தாநுபவ சூஸ்த்திர மாலை
முற்றிற்று

—o—

வாழிகலித்துறை.

உள்ளன்பினுலே போற்றி வருந்தியே வுண்மையுடன்
கள்ளமொன் றில்லாத் தொண்டர்களோடு ககனமிசை
வெள்ளமதாக பரவிடும் சைவ வேதமுடன்
தெள்ளமுதாகிய சிவனருள் பெற்றென் றும் ? வாழியதே

—*—

உ

சிவமயம்

ஸ்ரீ ஜெய விநாயகன் றுணை.



அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்

## ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகளின்

ஜ்யேஷ்டப் புத்திரரும்,

சென்னை சேத்துப்பேடு

“ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாலய”

ஆதீன அர்ச்சகருமாகிய

மதுரகவி - சிவப்ரகாச குமரகுரு தேசிகரா லியற்றிய

# வழிபடுதெய்வ ஸ்ரீ ஜெய விநாயகர் வணக்கம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

——(o)——

பண் - நட்டபாஷை.

——‡——

அகரவுக ரமுமகர மானவோங் காரத்தி
லானந்த வின்பமன்று
மற்புதா கரசோதி யகிலசம் ரட்சண்ய
வப்பனே வொப்பிலானே!
தகரமந் திரசக்தித் தாரகவா சித்திரட்
சகிரவியுந் தனலென்னவே
சருவசீ வர்களினுளுந் தங்கியே நடனமிடுந்
நாயகா தந்திமுகனே!

பகரரிய வுமைகௌரி பார்வதிகற் பகவல்லி
பனிமல ரெடுத்துசிகியாய்ப்
பணியதிருப் பாகமருட் பாலித்தத் திருமயிலைப்
பதிகபா லீசன்பாதந்
திகழணியாய் சிவஞானச் சிகாமணி விளங்கதயை
செயவேண்டுஞ் சிந்துபாயுந்
திருசேத்துப் பேடுசிவப் பிரகாஸ மடாலய
ஜேயவிநா யகதேய்வமே. (க)

அங்கென்ற நிறைவாசி யினில் ஙங் கணபதி
யானைமுக மானசிவமே!
அப்பனே வல்லாள னர்ச்சிக்க வினைதீர்த்
தரும்பெயர் புனைந்தவழகா
மங்காத வாழ்வதனை மன்றுடு மௌவைக்கு
மனம்போ லளித்தமணியே
மாசிலா சிவசோதி மயனே மஹாமந்த்ர
வாசவிசு வாசமணியே!
பங்கேரு கப்பாத பார்வதிகற் பகவல்லி!
பனிமல ரெடுத்துசிகியாய்ப்
பணியதிருப் பாகமருட் பாலித்தத் திருமயிலைப்
பதிகபா லீசன்பாதந்
திங்களெனச் சிவஞானச் சிகாமணி விளங்கதயை
செயவேண்டுஞ் சிந்துபாயுந்
திருசேத்துப் பேடுசிவப் பிரகாஸ மடாலய
ஜேயவிநா யகதேய்வமே. (உ)

உச்சிநடு வட்டத்தி லோதார்த வண்ணமூயி
ரோம்பிவோங் காரமயமா
யுண்மைவழி கண்டுமன மொப்புதிறத் தாலன்பு
வுயர்வாச முற்றவுளவே
மெச்சியது போல்நாத விந்துகரு வீடுற்று
வினையா லெடுத்தசனனம்

வீணுக்கி டாமலடி வேண்டுவார் வேண்டுமுறை
விக்கினம் போக்கு விமலா!
பச்சிளங் கிள்ளையுமை பார்வதிகற் பகவல்லி!
பனிமல ரெடுத்துசிகியாய்ப்
பணியதிருப் பாகமருட் பாலித்தத் திருமயிலைப்
பதிகபாலீசன் பாதஞ்
செச்சைவளர் சிவஞானச் சிகாமணி விளங்கதயை
செயவேண்டுஞ் சிந்துபாயுந்
திருசேத்துப் பேடுசிவப் பிரகாஸ மடாலய
ஜெயவிநா யகதெய்வமே. (௩)

அருமருந் தாகியடி யவர்ப்பவ மகற்றிடு
மப்பனே வைந்துகரனே!
ஆறுமுகன் சோதரா அங்கிங் கெனுதபடி
யகிலமெலா மானமுகனே!
கருமத்தி னுலேவர் கள்ளவிளை யாட்டிலே
கருவிகர ணங்களோயாக்
கவலையாம் பெருவலையிற் கட்டுண் டிழிந்திடுங்
கயவனெனை யாள்வதென்றோ?
பருவதாந் ரிதகௌரி பார்வதிகற் பகவல்லி
பனிமலரெ டுத்துசிகியாய்ப்
பணியதிருப் பாகமருட் பாலித்தத் திருமயிலைப்
பதிகபா லீசன்பாதந்
திருவளருஞ் சிவஞானச் சிகாமணி விளங்கதயை
செயவேண்டுஞ் சிந்துபாயுந்
திருசேத்துப் பேடுசிவப் பிரகாச மடாலய
ஜெயவிநா யகதெய்வமே. (௪)

—※—

### கூத்தாடும் விநாயகர் துதி.

பூம்பொழிற்சே ரின்பமணப் புன்னைவன க்ஷேத்திரமெய்ப் போத வாசி
தாம்பொழிந்து மும்மதங்க டனைப்போக்கி வழிபடுவார் தங்களுள்ள
மேம்படுமா னந்தசிவ வித்தகனை மாங்கனியை விரும்பி யுண்டத்
தேம்பொழிற்சேர் திருமயிலைக் கூத்தாடுங் கணபதியைச் சிந்தைசெய்வாம்

—※—



12280

## ஸ்ரீ கபாலீசுவரர்த்துதி.

விஞ்சைமலி யன்பரெலாம் விரும்பியுணுஞ் சிவஞான வமிர்தை வேதக்
கஞ்சன்சிரங் காத்தேந்துங் கண்ணுதலை பிறப்பிறப்பிற் கடவு டன்னை
மஞ்சையென வுமைவேண்ட மலர்ப்பாக மளித்தானை மாசில்லானை
மஞ்சுற்ற மணிமாட மயிலைக்கபா லீச்சுரனை வணங்கி வாழ்வாம்.

## ஸ்ரீ கற்பகவல்லியம்மை துதி.

அஞ்சலென வரிபிரமேந் திரர்திக்குப் பாலகர்மற் றலகில் தேவர்
விஞ்சைபெற விடமுண்ட வித்தகன் வெண்ணீற்றுரு மேனி யீச
னஞ்செழுத்தி னந்தரங்க மருளசிகி யாடன்மே லக்கம் நோக்க
மஞ்சையென வந்தகற் பகவல்லி மலர்ப்பதத்தை வணங்கி வாழ்வாம்.

## ஸ்ரீ சிங்காரவேலர் துதி.

பங்கயனைச் சிறைவைத்துப் பாரளந்தோ னமரேசன் றிசைகாப் பாளர்
சங்கையற மறைமுதலைத் தண்ணமருங் கங்கைசடை தரித்த பெம்மான்
றுங்கமலி தோடுடையச் செவியுறைத்த குருபரனைச் சூர்வென் றானைச்
செங்கதிரி னொளிகிளருஞ் சிங்கார வேலவனைச் சிந்தை செய்வாம்.

## ஸ்ரீ திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் துதி.

கருப்புவின் மதன் காயக் கண்ணுதலின் விழிவந்த கார்த்தி கேயன்
றிருப்புகலி சிவபாத விதயர் மனக்கிகழ தவச் செல்வ ஞகிப்
பொருப்பு வில்லான் புநிதைப் பொற் கிண்ணத் தீந்தமிர்தப் போதமுண்டு
அருப்ப முயர்மயிலை யத்தியணங்கை யென வழைத்தவரை யண்டி வாழ்வாம்

## ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

சொற்றுணை வேதியனென்றுச் சுகமுடனைந் தெழுத் தோதிச் சோமநாத
னற்றுணையாற் கடனீந்தி நஞ்சுண்டு மதநாகம் நயந்து போற்றப்
பற்றுடைய வப்பூதிப் பாலனுயிர்ப் பிக்கவருட் பாலித்தின்ப
சற்போதப் பண்ணிசைத்தத் தண்ணப்பர் கழலடியைச் சாணஞ் செய்வாம்

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

கடம்புதரு மிடைமாதர்க் கலவியினை நீத்தவர்க்கே கதியாம் வீடுத்
திடம்பெறவே சேர்புகுதச் செய்வோ மென்றருள் வேதஞ் செப்புங் கங்கைத்
தடம்புகழுந் தண்மதியஞ் சடைகரந்தச் சங்கரனைச் சதுராய் கங்கு
லிடம்பெருகப் பரவையிட மெழிற்றூது விட்டவறை யிறைஞ்சி வாழ்வாம்

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

குருவாக்கி னற்புதச் சீர்க்கொண்டு பவக் கோளகற்றிக் கோத்தை மார்க்க
வருவாத புத்தர்களை யொழித்தீழன் மகட்பேச வூமை நீக்கிப்
பெருவாழ்வா மம்பலத்தா னெழுத திருவாசகத்தைப் பேணித் தந்தத்
திருவாத வூர்வந்த தெய்வமணி வாசகரைச் சேவை செய்வாம்.

## ஸ்ரீ திருநந்திதேவர் துதி.

வெள்ளிமால் வரைநீடு விளங்கிழைசேர் விவலசிவன் விளம்பும் வேதந்
தெள்ளுமா கமமுதலாஞ் செழுங்கலையிற் றேர்ந்தன்பர் செவிக்கின்பாக
வுள்ளவா ருரைத்தருவி யுன்னதவேத் திரப்படைக்கை யுகப்பவேந்தி
வள்ளலெனப் பெருங்கருணைவாழ் வளிக்கும் நந்திகழல்வணக்கஞ் செய்வாம்

## ஸ்ரீ வைரவதேவர் துதி.

புவிபடைத்த நான்முகன் செய் பொய்யாகப் புரந்தரன் மாற்பொதுளுந்
தேவர், அவிதான முணர்ந் திடுமாரயன் சிரத்தை யருத்தப்பி யாகமத்தாற்
குவித்தோங்குங் குவடென்னக் குருதி சோர்ந்திட வெட்டிக் கூளியாடத்,
துவசமணி துவர்வென்ற வைரவரின் றூயகழற் றுதித்து வாழ்வாம்.

## ஸ்ரீ சரசுவதி துதி.

திகழ் மருவச் சுரும்பினங் கடேன் மாந்தி விசைபாடுந் தேற்றமாபோற்
புகழ்மருவ நாற்கவி மெய்போத நறும்புள காங்கம் பொங்க வின்பப்
பகமருவும் பாவணர்ப் பரிந்துண்டுப் பாராட்டும் பங்கயத் தோன்
சுகமருவ நாவிலுறைச் சுந்தரிபாரதி கழலைத் துதித்து வாழ்வாம்.

## காரைக்காலம்மையார், கண்ணப்ப நாயனார், வாயிலார் நாயனார், மங்கையர்க்கரசியார் துதி.

பாம்பத்தியுடன் சிலந்தி பக்திமலி யப்பருக்குப் பகர் நாளாறிற்
பூம்பக்தியாற் குருதிப் போகவிழி புதைத் தாரும் புந்திக் கோயில்
மாம்பத்தியாற் கட்டி மகிழ்ந்தாரு மாம்பழம் பெற்றுரு மாட்சித்
தேம்பத்தி சிரமேற்ற மங்கையர்க் கரசியர்தாட் சென்னி சேர்ப்பாம்.

## திருத்தொண்டர்கள் துதி.

பாமாற்பு தானந்தப் பரசிவமே மெய்ப் பரமாய் பக்தி பூண்டுக்
கரமார்த்தக் கடிமலராற் றுப்பியிசை மருவிடப்பண் கனிந்து பாடி
சிரமேற் றைந்தெழுத் தோதித் திருநீறக்கம் புனைந்து சிவப்ராகாஸத்
திரமார்த்தப் பெரியவராந் திருத்தொண்டர் செய்யகழற் சிந்தை செய்வாம்

### அங்கம்பூம்பாவை யம்மையார் துதி.

செருக்குமுயர் சிவநேசச் செட்டிதவச் செல்வி சிவகாமிச் சேர்வைப்
பெருக்குமண மலர்கொய்யப் பிநாகத்தா லுயிர்மாளப் பேணுமத்தி
யுருக்கொளவே காழிபிரா னுயர்பதிகத் தண்மையுல கோம்பவந்த
அருக்குயரு மங்கம் பூம்பாவைப் பங்கயக்கழலை யண்டி வாழ்வாம்.

### ஸ்ரீ சண்டேசுரர்த் துதி.

குல்லை மார்பன் றேவர்க் கோன் முனீந்திர ரடியர்கும்பிட் டேத்துஞ்
சொல்லையுனி மண்ணி நதித்தூய் மணலாற் சிவலிங்கந் துரிசிலாக்கித்
தொல்லையறச் சுரபியமிர் தூற்றி மஞ்சனமாட்டத் தூற்றுந் தாதைச்
சல்லியறத் தாளறுத்த சண்டேசு வரர்கழலைச் சார்ந்து வாழ்வாம்.

### ஸ்ரீ திருவள்ளுவ நாயனூர் துதி.

கேணிவிட்ட தூற்குடங் கீழுறவாதந் நிலைநிற்கக் கிளர்த்துங் கற்பைப்
பேணிச் சோதனைக் காணப் பெரிதுணருந் தேவரெலாம் பெயர்ந்துநாண
பூணிலவும் பதிபக்திப் பூண்டவா சுகிமணந்த செந்நாப் போத
மாணிலவு மயிலைவளர் மஹத்வ வள்ளுவர் கழலை மதித்துவாழ்வாம்.

—o—

## குருவணக்கம்.

—✻—

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாலயம்

### ஸ்ரீமத் - சிவப்ரகாச தேசிக சுவாமிகள் துதி.

நாடுமுறை நம்பரம னவிலும் பஞ்சாக் கரத்தை நயந்து கேளா
தாடுகின்ற சிகிடனத் தாசையுற்ற தோடத்தா லம்மைப் புன்னைக்
கூடுமணத் திருமயிலைக் குறுகி பண்ணிசைப்பாடிக் குணமாங் கோயில்
வீடுற்ற குரவன் சிவப்பிரகாஸ தேசிகன்றுள் வேண்டி வாழ்வாம்.

உலகெலா மென்ற காப்பு வுயர்வுற வோதுங் கீர்த்தி
நலமிக வெடுத்துச் சொன்ன நாதனின் பெருவை நாவாற்
சொலற்கரி தலவோ வன்பர் துயர்கெட துணைசெய் தாளுந்
திலகமே சிவப்ர காஸ தேசிகா திருத்தாட் போற்றி.

—o—

## நூல்,

## சிவப்பிரகாச தேசிகமாலை.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

### திருத்தாண்டகம்.

ஒழியாதக் கவலையதி லுவக்க வைத்தா
யுண்மையீ தெனவறியா துழல வைத்தாய்ப்
பழிபாவக் காரனெனப் படைப்பு வைத்தாய்ப்
பரஞ்சோதி ! யென்னறிவேன் பாவி நாயேன்
சுழிமுனையி னடனமிடுஞ் சூட்சங் காட்டி
சொல்லரிய சிவஞானந் துலங்க வைப்பாய்
செழிப்போங்குந் திருமயிலை ! சிவப்ரகாச
தேசிக கபாலீச தேவ தேவே. (க)

மானென்ற விழிமடவார் மயக்க முற்று
மாளாமே நினதடியை மன்னி வாழ்ந்தார்
நானென்ற வகங்காரம் நசித்தி டாது
நாளெல்லாம் பெருவினையை நாட்ட லென்னே ?
யேனென்று கேட்பவர்க ளெவருண் டையோ
யேமன்கைப் பாசத்தா லிறக்குங் காலம் ?
தேனெகிழுந் திருமயிலை ! சிவப்ரகாச
தேசிக கபாலீச தேவ தேவே. (உ)

உண்பதற்கே யிரவுபக லுழைத்தே னப்பா
வுயரிய மெய்ப் பதவிக்கே வுவ்வு கொண்டார்
பண்புடைய சத்திநிலைப் பார்த்தே னல்லேன்
பக்திவழி நித்தியமும் பரவு மன்ப
ரொண்கழலை வருடிலே னேங்கா ரத்து
ளுரைக்கவொணா ரகசியத்தை யுரைப்ப தென்றோ?
திண்புகழுந் திருமயிலை சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (ங)

பன்னாளு மிழிவுடலைப் பார மாக்கிப்
பட்டதுயர்ப் போதாதா பரனே நாயே
னென்னாளு மிப்படியே யிருந்து விட்டா
லெப்போதுன் னோடுறவா யிருப்ப தையா?
சொன்னாலுங் கேளாதேன்? சுயம்பே சும்மா
சுகம்வருமோ சிவஞான சூட்ச வாசி
தென்னனே! திருமயிலை சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (௪)

பொட்டெனவே நாகமது புற்ற டங்கிப்
போகுமா றுண்ணாட்டத் துண்மைக் கண்டு
கட்டெனவே யைவர்களின் கதிய டக்கிக்
கருவிகர ணங்களோய்ந் திடக் கண்மூடி
மட்டெனவே வாசிருசி வாய்ம டுத்து
மாசிலா சிவஞான மணக்கச் செய்வாய்
சிட்டனே திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (௫)

உண்ணாவை போகமதை யுள்ளே காட்டி
யொருசந்தி மறவாம லூமை சேர்க்கு
மண்ணாவென் னுருயிரே வாயி ரத்தெட்
டருமாற்றி னபரஞ்சி தமே மாலிங்கம்
விண்ணாகி மண்ணாகி வேத மாகி
விளங்கிழையா ளுமைபாகம் விரும்பு மெந்தாய்
தெண்ணாருந் திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச! தேவ தேவே. (௬)

கருப்பிணியாங் கடனீந்தக் கருத்தில் வைத்துக்
கடிமலரா லர்ச்சித்தார்க் கணக்கி லாதார்
திருப்பணியே முத்திதருந் தெப்ப மென்றுச்
செய்யமறை முரசறையுந் திருவே ஞானக்
கரும்புதரு சுவையமுதக் கனியே பாகே
கற்கண்டே கயவனேற் கருள்வ தென்றோ?

திருப்புகழே திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (எ)

தேகமே சிவன்கோயில் திருவாங் காசி
செய்ராமேச் சுரலிங்கந் திவ்ய க்ஷேத்ரம்
போகமுண் டிதற்குளே பொருத்த முண்டுப்
புத்தியதைத் திறமாக்கிப் போற்றிச் செய்தா
லாகமிதே வன்பென்று ரடியா ரெல்லா
மறிவுக்கு ளறிவான வழகா சந்திர
சேகரனே! திருமயிலை சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (அ)

விதியென்ற சொன்மலிந்து வீசப் பாசம்
வெடித்தப்புண் போன்றவல்குல் விருப்பத் தாலே
சதியாய மயக்குற்றுச் சகடைப் பற்றித்
தவிக்கின்றேன் சந்ததமுந் தமிய னேற்குப்
பதியாய நிலைசேர்த்துப் பணிப்ப தென்றோ?
பரத்துவனே சிவகாமிப் பங்கா தஞ்சந்
திதிமருவுந் திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (கூ)

பூரணா னந்தசிவ போக போதப்
புனிதமலி புத்தேனைப் புகழ மாந்தி
ஆரணங்க ளளப்பரிய பரத்வ மான
வைங்கரவோங் காரத்தி னுட்சி மல்கி
காரணக்கா ரியங்கடந்தக் கர்த்தா யேழைக்
கயவினேனைக் காப்பதுநின் கடமை யன்றோ?
தேரணிசூழ் திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (ய)

காடடைந்துக் கனலெழும்பக் கடுவெங் காலன்
கவருமுனங் கருத்திற்சிவ லிங்கங் கண்டுச்
சேடடையச் செடிதலையன் சிவப்ர காஸ
தேசிகன் குமரகுரு செப்பும் புன்சொற்

பிடடைய பக்திவழிப் பேணு மப்பா
பிறப்பிறப்பி லாதவனே பினாக பாணி
தேடரியத் திருமயிலை! சிவப்ர காச
தேசிக கபாலீச தேவ தேவே. (யக)

—o—

## சிவமயமாலை.

—(o)—

பண் - புறநீர்மை.

நினைந்திடு நேரமெல்லாம் நிமலனின் திருநீற்றை
அனவர தமும்பூசி யாகஞ்செ யர்ச்சகராஞ்
சினமிலா சிவநேசத் தில்லைவா ழந்தணர்கள்
தினந்துதி கபாலீசத் தினகர சிவமயமே. (க)

வையகம் புகழ்தில்லை வளம்பெறு திருமுதூர்
பைவிட முண்ட சதுர் பக்தியே மலிந்திடுவார்
மெய்யணி நீலகண்டர் மிகுபுகழ் மேயவனே
தெய்வ கபாலீசத் தினகர சிவமயமே. (உ)

மாசற் றவருள்ளம் மன்னு மஹத்துவனே
பூசமிற் காவிரிப்பூம் பட்டினத் தியற்பகைநன்
வாசமனை தந்து வாழ்வாங் கதியடைந்தார்
தேசுயர்த் திருமயிலைத் தினகர சிவமயமே. (ங)

சேது பதிராமன் சேவித்த சிற்பரனே
ஓதிமா மலர்தூற்றி யோங்கு மடியவரெப்
போது மறவாதுப் பூசைப் புரியரனே
தீதகற் றிடுமயிலைத் தினகர சிவமயமே. (ச)

செந்நெல் முளையமுதுஞ் சிறுபயிரின்கறியு
முன்னித நள்ளிரவி லூட்டி சிவதொண்டி
லின்புறு மிளையான்குடி யெழின்மலி மாறர்துதி
தென்னனே! திருமயிலைத் தினகர சிவமயமே. (ரு)

ஓங்கார மந்திரத்தி லுதித்த வுலகனைத்து
நீங்கிடா நின்மலவெண் ணீறேறுந் திருமேனி

பாங்குயர் மெய்ப்பொருளாய்ப் பரவுவார் பக்திவழி
தீங்ககற் றிடுமயிலைத் தினகர சிவமயமே. (௬)

அதிகார நந்திமிசை யம்மைகற் பகவல்லி
துதிசெய வள்ளியுடன் றாய்மலி தெய்வயானை
விதிமொழி சிங்கார வேலவன் மாட்சிநிறை
திதிதருந் திருமயிலைத் தினகர சிவமயமே. (௭)

மாலுற்ற மச்சவுரு மாற்றிய மஹத்துவனே
தாலமெல் லாந்தழைக்க தண்கடனஞ் சுண்ட
மூலமா மந்திரத்து முகிலே கபாலீச
சீல மலிமயிலைத் தினகர சிவமயமே. (௮)

பண்டை வினைமாற்றிப் பாவங் கெடுப்பவனே
விண்டோ டயன்காணு விமலா விக்கினங்க
ளண்டா தகற்றுமுமை யர்த்தனு ரீஸ்வரனே!
செண்டா டும்விடையாய் தினகர சிவமயமே. (௯)

சுக்கிரன் கண்ணிழந்துத் துதிக்க வருட்சுரந்த
செக்கர்வே ணியதொண்டர் சேவடி பற்றநிலே
மிக்கசெங் குன்றாரில் விறன்மிண்ட நாயனுர்சொற்
றிக்கயஞ் சேர்மயிலைத் தினகர சிவமயமே (௰)

மன்னும் பழையாறை வணிகர மர்நீதித்
துன்னியத் றுணைவிசெல்வர்த் துலாத்தேறிச் சுகமுற்றார்
சொன்னலாற் சிவப்ரகாச குமரகுரு தேசிகன்சொல்
சின்மயத் திருமயிலைத் தினகர சிவமயமே. (௰௧)

---

## மீனேஸ்வரமாலை.

பண் - பழம்பஞ்சுரம்.

(ಂ)

ஓங்கா ரத்தி னுட்பொருளை யுணர்த்த வல்ல வொருமுதலே
ஆங்கா ரத்தா லித்தேக மழியு முன்சேறு வந்தகனுல்
தீங்கிற் சிவகாமியார்மடைப்பச சிந்தும்யானையைச் சிதைத்தருத்தார்
நீங்கா திருக்குஞ் சிவஞான நிமலாமயிலைமீனேஸ்வரனே. (௧)

பாசவறிவைப் பற்றறுத்துப் பசுவ றிவின் பலனுணர்ந்துப்
பேசற்கரியப் பிரணவத்துட் பீடுயர்ப் பெரியப் பெருமானே
வாசமணக்கு வாலையுமை வாமமன்னு மஹத்துவனே!
நேச மணக்குஞ் சிவஞான நிமலாமயிலைமீ னேஸ்வரனே (௨)

தந்தைமதியின் சார்பதினுற் சனித்தேன் சத்தி மயமதிலே
முந்தை வினையின் கதிமூழ்கி முரணேற் றழியா மற்படிக்கு
சிந்தை சிவமாய் வைத்தின்பச் சிறப்பு மன்னச் செய்தருளி
நிந்தையகற்றுஞ் சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௩)

முத்தி யளிக்கும் பெருந்தகையே மூவர்முதலே முக்கண்ணு
பத்திநீற்றின் பயனோர்ந்து பகையாய் வந்த வதிசூர
னெத்தி மறைத்தே வாள்வீச லேற்று ரெயின னூரன்பர்
நித்தில மேவுஞ் சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௪)

வந்தே னிழிவாம் வாசல்வழி வந்துற் றிருந்தவ் வழிக்காசைப்
பெந்த விருப்பம் பெரிதுற்றுப் பேயா யலைந்தேன் பெருமானே
சந்தைக் கூட்ட மென்றறியாச் சகடைப் பற்றித் தவிக்கின்றே
னிந்தமா யுள்குஞ் சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௫)

தேனுர்கமலத் தயனிந்திரர்த் திருமாற்றேவர் சேவைசெயுஞ்
ஞானனந்த நமச்சிவய நாதா கண்பார் நவிற்றிண்ண
ரூனுமிறைச்சி ருசித்தூட்ட வுகந்தேற்றவனே வுமைபங்கா
நீனு னகற்றுஞ் சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௬)

விருத்தி யில்லேன் வினைப்புழுவாய் விளங்குகின்ற வீணனெனைத்
திருத்தி யாளுந் திருக்கடவூர் சிவமெய்த் தொண்டின் சீர்மலியப்
பொருத்தமுடனே குங்குலியப் புகைதந் தன்பாம் போதமுற்றூர்
நிருத்த மாடுஞ் சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௭)

புற்றி லரவாம் போன்றவினைப் பொருந்தி யுலகப் போராட்டஞ்
சுற்றிக் கடிக்கச் சுகமுண்டோ? துணையே மங்கா சுடர்விளக்கே
செற்றூர் புரமூன் றெரிசெய்த சிவனே திங்கட் சடையுடைய
நெற்றிக் கண்ணு! சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௮)

காற்று புள்ளே கடிமணத்தாய்க் காதல ...கண மங்கலத்து
ஆற்று ருணவு வடுவரிசி யமுதங் கீரை யகற்கமா...

றேற்றூட்டி யரிந்திடுவார் சிந்தை களிக்குஞ் சிவநாதா!
நீற்றூர்மேனி சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௬

காட்சி மலிய வாலின்கீழ்க் கனிந்தே நால்வர்க் கறமுரைத்த
ஆட்சி யானே யருணோர்மங் கலநாட் டன்ப ராஞயர்
மாட்சிமலியக் குழலூதி மந்திரவெழுத்தைந் தால்மகிழ்ந்தார்
நீட்சி விழியோய் சிவஞான நிமலாமயிலைமீ னேஸ்வரனே. (௰)

கன்மதன்மக் கதியறியேன் காலன் வலிக்கே காலத்து
மின்பமுண்டென் றேமாந்தே னேதுக்குற்றே னெம்மானே
சின்மயா செடியன் சிவப்ரகாச தேசிகன் குமர குருசீர்கொ
ணின்மல வடிவே சிவஞான நிமலா மயிலைமீ னேஸ்வரனே. (௰க)

—✻—

## காருண்யக் கற்பகமாலை,

—o—

பண் - இந்தளம்.

—✻—

வாசி மடுத்தார் வாதையகன்றூர் வல்ல கதிமேவி
மூசு வண்டர் மொய்க்கா சைவ மும்மையா லுலகாண்டார்
மாசில் மதுரை மன்னு மூர்த்தி மகிபர் மாட்சியனே
காசி மருவுங் கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே. (க)

அன்பின் பெருக்கா லாடிப் பாடு மடியவ ரகத்தானே
இன்பமுண்டேற் றுன்பமுண்டென் றியம்பினு ராரூரர்
மன்னும் புகலூர் முருகநாயனூர் மலர்மாலை மகிழ்ந்தளித்தார்
கன்னற் பாகே கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே. (உ)

வந்தசனன வாதையகற்ற வல்லாய் வாமமுமைப்
பந்தமில்லா தலையூ ருருத்திரப் பசுபதி யார்ப்பரமன்
சிந்தனையால் வாவி மூழ்கிச் சிவயநம வென்னக்
கந்த மணக்குங் கபாலீச் சரத்துக் காருண்யக் கற்பகமே. (௩)

அச்சோவென்ன வகிலம்புறந்த வப்பா வைம்முகனே!
சொச்சொ ருபச் சுகசொரூபந் தோன்றும் விடையூர்தி
நச்சிநாளைப் போவேனென்ற நந்தனை நயந்துண்டக்
கச்சு பூணுமைக் கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே (௪)

மழுமா னரவப் படைமலிந்த மஹத்துவ சின்மயனே
பழிதி லாடை யொலித்துயோகாம் பானடி யவர்ப்பாதந்
தொழுங் குறிப்புத் தொண்டர் காட்சித் துலங்கவருட் சாந்தக்
கழும னீக்குங் கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே. (ரு)

சருவஞ்சிவ சத்திமயமே சண்டன் வலிதவிர்க்கு
மரும முணரா மாயவாழ்க்கை மயங்கி வீழாதே
பருவ தத்திற் பணித்த விளக்காய் பக்தி வலைப்பட்டாற்
கருமந் தீர்ப்பான் கபாலீச்சரத்துக் காருண்யக்கற்பகமே (சு)

ஓதற்கரிய வோங்காரத்தி னுண்மை வழிகண்டு
பாதகங்க ளகன்றநல்லோர்ப் புரவும் பரசிவமே
வேதமலியுஞ் சேய்ஞலூரின் விசார சருமான்பாங்
காத லோம்புங் கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே. (எ)

மதிவிளக்கே மறைவிளக்கே மனனச் சுடர்விளக்கே
துதிவிளக்கே சோதி காட்டுந் தூயத் துணைவிளக்கே
பதிவிளக்கே பாவம்போக்கும் பார்வதி யுமைப்பாக
கதிவிளக்கே கபாலீச்சத்துக் காருண்யக் கற்பகமே. (அ)

தபமுந்தான யோகதத்வ சத்துவ தத்சத்தா
யுபதே சத்தி னுண்மைக் காண வுள்விழி யதைத்திறந்து
வுபரதிவை ராக்யசாந்த வுந்த நிலையருளிக்
கபந்து டைக்குங் கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே (கூ)

பாகியுமோ டனன்னியமே காந்தப் பத்திரச
மாகியலட் சணத்தினன்பே யகிலப்ர ணவமாகி
யூகியவா சிகமஹத்தே வுயிர்க்குயி ரானவனே
காகுத் தன்றுதி கபாலீச்சரத்துக் காருண்யக் கற்பகமே. (ய)

அமரரோது மம்மையப்ப னன்புரகத் தகலாக்
கமமு மிறையைக் கபாலீச்சரத்துக் கர்த்தனை சிவப்ரகாச
குமரகுரு தேசிகன்புண் குஞ்ச மலங்கற் கொண்டு
நமபடரை நாடாதகற்ற நவிற்ற நற்றுணையே. (யக)

## தினகரமாலை.

—(೦)—

பண் - இந்தளம்.

—‡—

வீதிகாட்டி வினையழுத்த வெய்யகாம வெகுளிபட்டு
பீதிகொண்டுப் பிழைக்கவேதுப் பெற்றிலாத பேதையேற்கு
சோதிகாட்டி சிவப்ரகாசச் சுகுணமந்த்ர சுடர்ப்பராவ
தீதகற்று நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (௧)

கூடுவிட்டிங் காவிப்போமுன் கூற்றைவென்ற குணங்குடிக்கு
வீடுகட்டி வினையகன்றார் விக்கினமா வேதையற்றார்
நாடுபோற்றும் ஆமூர்சைவ நாவுக்கரசர் நயந்து போற்றுந்
தேடரிய நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (௨)

உங்கரிக்கு மூலகவேட்கை யுண்மையென் றுகந்தேனும்பாற்
பங்குந்தந்து தவுமெந்தைப் பரனேபாற் கடல்விடத்தைத்
தங்ககண்டந் தரித்தவெந்தை தற்பர சதாசிவமே
சிங்குவைப்பு நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (௩)

முத்தியான வள்ளலின்ப மூழ்கவாசி மோனவாலை
சத்தியின்ப வாசமுற்ற சாமியேக்ரு பாகரசம்
பத்தினோக்க பக்தியார்வம் பலுகநத்தி பாடவாழ்வு
சித்தியாக்கு நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே (௪)

காணவின்பங் கருத்தகலா காட்சிமல்சுங் கண்ணுளானே
தோணுஞ்சன்மத் தொல்லைநீத் துன் றாயபத்திச் சுகமுதிக்க
வேணுமாறு விரும்பியன்பர் வேண்டுகின்ற வேத நாதா
சேணுங்கடந்த நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே, (௫)

மையவக்கம் யகரமாக மண்நகார மாக வுண்டி
பெய்துருத்தி சாணுமாகப் பேணுமுந்தி வகரமாக
செய்யமேனித் திகழமன்று டிருவிலாசத் திறமைக்காணச்
செடியகற்று நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (௬)

மூக்குநுனிமே னோக்கமாக முதிருமங்கி விழியிற்கங்கை
தேக்கு மின்பு செட்டல்ம்பற்றித் தியமார்க்கங் சேர்ந்திடாது

காக்கும்ஞானக் கருணைபக்திக் கட்டுபட்டு காணமுத்திக்
தேக்குமின்ப நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (எ)

ஓடுகின்ற மனக்குரங்கோர் வழியொடுங்கி யுண்மைக்காண
நாடுகின்ற ஞானமன்று ஞுதனன்பு நல்குமாமால்
வீடுபெற்ற மேயநல்லோர் வேதையற்ற விதமுணர்த்துஞ்
சேடர்போற்று நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (அ)

குலச்சிறையார் பேறுமிழலைக் குறும்பர்காரைக் காற்பேய்க்கூரு
நலநிறைந்த சோதியேமெய் நாடுமத்த னேவிஸ்வாச
மிலகுமன்ப ரேற்றமுத்தி யென்றுமேத்து மிதயவாசத்
திலகமன்னு நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (கூ)

கூற்றைகூற்றி குழந்தைக்கன்று குரைகடற்பா லூட்டிவைத்த
பேற்றையுன்னி பேசுவார்கட் பிரணவத்தின் பெருமைவாசி
காற்றை வீணிற் கழித்திடாதுக் கன்மதன்மங் கருதுவார்கட்
சீற்றநீக்கு நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (ய)

பொய்யி லாதப் புந்திவாசம் பொருந்திஞானப் புனித மன்னுஞ்
செய்ய தாட்கு சிவப்ரகாச தேசிகன் குமர குரு
வுய்துரைக்கு முயர்விற் புன்சொ லுகந்தருள வேண்டுந்தஞ்சந்
தெய்வவாழ்வே நமச்சிவாயத் திருமயிலைத் தினகரனே. (யக)

## சிவாதிபத்தியமாலை.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

எல்லா யருடர மனமில்லை யோசுக வடிவுகாட்டிச்
சொல்வாய்ப் பிரணவத் தோன்றலே வோங்காரத் துட்பொருளே
நல்லாய் சிவஞான கால்கினீர் நால்வர்க்கு நலமுறவே
யெல்லாம் நினதருளே கபாலீச்சரத் திறையவனே (க)

குண்டலி சக்தியுட் கூடிருவாசிக் கொண்டுநடு
விண்டப னிந்திரன் தேவர்கள் வேண்டு விதிமுறையே
பண்டைய நாள்வினைப் பற்றைப் போக்கும் பாசிவனைக்
கண்டத்தி னில்விடங் கொண்டவ னைத்துதி கதிபெறவே (உ)

உள்ளிருந் தாவரணத்தகை யோதிய வோசைநிலை
விள்ளிருந்தன்ன வினைவுறு சென்மம் விதிப்படியே
தெள்ளரு மப்பூதி சேயன் பிழைக்கச் செய்தா ருண்மை
வள்ளல் சிவனருள் வந்திக்க சென்மம் வாய்த்திடாதே. (௩)

பூந்தியு ளானந்தம் பொருந்தச் சிவமயப் போதமுற்றி
சந்திரன் ஞாயிறுத் தனல்விழி நோக்கத்தண் டாமறையின்
சுந்திர னற்கலைச் சூழ்ந்துளத் தன்பே சுகசொருப
மந்திர மாலிங்க மாக்குவிப்பான் சிவ மஹத்துவனே. (௪)

கூட்டிவைப் பானுந்திக் கூடியக் கருவதுக் கொண்டமுறை
நாட்டிவைப் பான்றில்லை நாதன் சிவபிரா னுதவிந்து
மூட்டிவைப் பான்முகி லென்னப் பொழிமழை முழங்குதிரை
யாட்டிவைப் பான்கரு ணைப்படி யாதரை யன்பர்களே. (௫)

வாக்கான் மகிழ்ந்திடு வையகத் தேமதி வைப்பிடத்தை
நோக்கா தலைந்திவ னுடங்கிடுவாய் நுணலைநிகர்வாய்
சாக்கா டெழுமுனந் தண்ணரு டரவல்ல சற்குருவைத்
தூக்கா விறைஞ்சிடத் தோன்றுஞ் சிவானந்த சொரூபமே (௬)

இம்மை மறுமைப் பயனுக வன்பரிதயத்திலே
செம்மை மலியுஞ் சிவப்பிர காசனற் சீர்த்திபுகழ்
தம்மை யறிந்திடா சண்டன்கைப் பாசத்தாற் சாவதென்னே?
அம்மென் றடங்கி ஆவென் றகன்ற ததிசயமே. (௭)

உதிக்கக் கருவதி லோங்கார வட்டத் துயர்வடிவாய்
புதிக்கப் படைத்தப் பார்வதி பங்கன் பண்புறவே
துதிக்கமெய் யறுபான் மூவராந் தொண்டர்ச் சூழவலம்
மதிக்க விளங்கிடு மயிலா புரிசிவ மாணிக்கமே. (௮)

குருலிங்க சங்கம பக்திகொண் டார்மனக் குறையகன்றார்
கருலிங்க தட்சணு மூர்த்தமென் றேசது ருருவந்தாங்கி
பெருலிங்க மேனி வாதவூ ரர்க்கருட் பேணித்தந்தத்
திருலிங்க மாகிநின் றுன்றிருப் பெருந்துறை சிவாதிக்யமே. (௯)

போமென் றபானனுற் புவிகண்டு மாயத்தின் போதமுண்டுத்
தாமென் றகங்காரந் தலையேற்றி நின்கின்றச் சரீரமிதில்

ஆமென் றகல அம்மென்று மூடிடு மந்தரங்கம்
ஓமென்ற பிரணவத் தோங்குஞ் சிவாம்பிகை யுளவதுவே. (௰)
கமலா சனத்தினிற் கான்மாறி யாடியக் கண்ணுதலே
சிமயத் தொளிர்சிவ தீபம் விளங்கிட சிவப்ரகாச
குமரகுருதே சிகன்மொழி கொண்டருட் சூர்ந்துதயை
நமச்சிவாய வாழ்க நல்கும் கபாலீச நமநமஸ்தே. (௰௧)

—※—

## போற்றி விருத்தம்.

சூத்திரா போற்றி ஞானச் சுயம்புவே தொண்ட ருள்ள
நேத்திரா போற்றி நீத நிமலவெண் ணீற்ருய் மைலே!
சேத்திரா போற்றி சத்தி சிவகாமி சிகியாய்ப் போற்றுஞ்
சாத்திரா ஸ்ரீகபாலீ சனேகழற் றஞ்சம் போற்றி.

—§—

## வாழி விருத்தம்,

—※—

ஐங்கர ஜெயவிநா யகன்கபா லீச
னம்மைகற் பகவல்லி யாறுமுகன் வள்ளி
மங்களஞ்சேர் தெய்வயானை மயில்வேல்நவ வீரர்
மந்திரவெண் ணீறக்க மஹத்வகுரு நால்வர்
துங்கமலி சிவநேசத் திருத்தொண்டத் தொகையார்
தூயசிவ மறைச்சுருதித் தொழும்செயு மன்பர்
எங்குபுகழ் சைவநெறி யின்புடைய பக்த
ரிந்நூலுக் குதவினரு மென்றும் வாழியவே.

---

திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வாரின்
ஐம்பத்தைந்தாவது வருடத்திய
சிவஞானச்சிகாமணி ஸமாப்தம்.

—※—

ஓம் நமப்பார்வதிபதயேநம: அரஹரமஹாதேவா.
திருச்சிற்றம்பலம்.



